# கேள்விகளும் பதில்களும்

சகோதரன் நெவில், உங்களுக்கு நன்றி. நான் உங்களுடைய கரங்களை குலுக்கியாக வேண்டும். சகோதரன் நெவில், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இது உஷ்ணமாக இருந்தாலும் கூட, இங்கே திரும்பவும் வருவது மிகவும் நல்லதாகவே உள்ளது. பழைய ஏற்பாட்டில் ஒருவர், “நாம் கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று அவர்கள் சொன்னபோது, நான் மகிழ்ச்சியாயிருந்தேன்” என்பது போன்று கூறினார் என்று நான் நினைக்கிறேன்.

ஆகவே இப்பொழுது, இது மிகவும் உஷ்ணமான மாலைப் பொழுதாகத்தான் இருக்கிறது. இங்கே எங்களுடன் வந்துள்ளவர்களாகிய நீங்கள், ஏன் இந்தியானாவில், இங்கே இந்த—இந்த சதுப்பு நிலத்தைச் சுற்றி வாழ்வது கடினமானது என்பதை உங்களால் காண முடியும். நான் உங்களுக்கு சொல்லுகிறேன், அது தொண்ணூற்று மூன்று பாகை மாத்திரமே, தொண்ணூற்று மூன்று பாகை வெயில்தான். ஆனால் நீங்கள் பாருங்கள், நீங்கள் நூற்றி இருபது பாகை உஷ்ணத்தில் செல்வீர்களானால், லூஸியானா மற்றும் அரிசோனாவில் உள்ளதுபோல, அது எப்படிப்பட்டது என்பதை எப்படியும் அதனுள் செல்ல முடியுமென்பதை…உங்களால் உணரமுடியும், அது—அது மாத்திரம் இங்கேயிருக்குமானால், நாம் மாண்டுபோவோம்; அவ்வளவுதான். ஆனால் இங்கேயிருந்து இந்த ஆராதனையின் நேரத்தை செலவிடுவது மிகவும் நலமான ஒன்றாகும்.

2 இக்காலை நான் வீட்டிற்குச் சென்ற பிறகு, நான் உண்மையாகவே, உண்மையாகவே அருமையாக உணர்ந்தேன்…அநேகர் இக்காலை சுகமடைந்தனர் என்று நான் விசுவாசிக்கிறேன், ஒருக்கால், இந்நேரம் வரை அநேகர் அதை—அதை உணராமல் இருக்கலாம், ஆனால் அவர்கள் சுகமடைவார்கள்; ஏனெனில் கர்த்தருடைய வார்த்தையானது இக்காலையில் நம்முடைய இருதயங்களுக்கு விலையேறப்பெற்றதாக இருந்தது.

3 நான் சற்று முன்…நான் புறப்பட்டபோது, பரிசுத்த ஆவியானது இங்கே இருக்கையில் இந்த சுவர்கள் முழுவதும் பெரிதாக ஊதப்படுவதுபோல, சுவாசிப்பது போல காணப்பட்டது. அதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தவனாக இருந்தேன்.

4 ஆன்டர்சனைச் சார்ந்த, தேவனுடைய சபையின் மேய்ப்பரும், என் நண்பருமாகிய, சகோதரன் ஸ்மித் சற்று முன்னர் ஜெபித்துக்கொண்டிருந்ததை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். சகோதரன் ஸ்மித் ஒரு சிறிய கைப்பிரதியைக் கொண்டிருந்தார், இங்கே அவைகளைக் கூடாரத்தில் கொடுக்கவில்லை என்று நான்

அப்படியானால், கர்த்தராகிய இயேசு நமக்கு அளிக்க பிரியப்படுகின்றார் என்று நான் விசுவாசித்து நான் உங்களுக்கு ஒரு வேதவசனத்தை அளிக்கப்போகிறேன்.

41 நீங்கள் முயற்சி செய்திருந்தால், நீங்கள் அந்த மேய்ப்பரிடம் பேசியிருந்தால், நீங்கள் வெவ்வேறு நபர்களுடன் பேசியிருந்து அவர்கள் அதை கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டு அதை விசுவாசிக்காமல் இருந்தால், இதைத்தான் மத்தேயு 7:6 ல் அப்படிப்பட்டதைக் குறித்துதான் இயேசு கூறினார்.

> *பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துக்களை பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து திரும்பி…உங்களைப் பீறிப்போடும்.*

42 ஆதலால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தையும் விசுவாசியாமல், அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார் என்று விசுவாசியாமல் இருக்கின்ற ஒரு சபைக் கூட்டத்தோடு நான் இணைந்திருப்பேனா என்பது சந்தேகம் தான். நான் ஒரு சபைக்கூட்டத்தில் உட்கார்ந்து அவர் கிரியை நடப்பிப்பதை அவர் கூறினவிதமாகவே அவர் செய்கிறதை நான் பார்க்கையில், நான் மக்களிடம் இப்படிப்பட்டவைகளிலிருந்து வெளியே வந்து, எல்லா வேதவசனங்களையும் பிரசங்கம் செய்து அவைகளை விசுவாசிக்கும் ஒரு—ஒரு நல்ல சபையை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள் என்று நான் கூறுவது நியாயமானது என்று நான் உணருவது சரியே என்று நான் நினைக்கிறேன்.

**77.** இப்பொழுது, அடுத்த கேள்வி: **நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருந்தாலொழிய நீங்கள் இரட்சிக்கப்படவில்லை என்பது உண்மையா?**

43 அதன் பேரில் கிட்டத்தட்ட ஐந்து மணி நேரம் ஒரு நல்ல விவாதத்தை நடத்தலாம். நீங்கள் கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு தண்ணீர் ஞானஸ்நானத்திற்காக ஆயத்தமாயிருக்கையில், நீங்கள் இன்னுமாக குணப்படவில்லை; நீங்கள் *மனந்திரும்புதலுக்காக* மாத்திரமே விசுவாசிக்கிறீர்கள். *மனந்திரும்புதல்* என்றால், “மாற்றப்படுவதற்காக” என்பதாகும்.

44 இப்பொழுது, இதை இன்னுமாக வலியுறுத்தத்தக்கதாக, தம்மை மூன்றரை ஆண்டுகளாக பின்பற்றி வந்த பேதுருவிடம் இயேசு… மத்தேயுவின் புத்தகத்தில் உள்ள 10 வது அதிகாரத்தில் இயேசு பேதுருவிற்கு அசுத்த ஆவிகளை துரத்த, அவைகளுக்கு எதிராக உபயோகிக்கவும் வியாதியுள்ளவர்களை சொஸ்தமாக்கவும், சுவிசேஷத்தை பிரசங்கிக்கவும் வல்லமையை அளித்தார். இதைச் செய்ய அவனுக்கு வல்லமை இருந்தது. பரிசுத்த யோவான்17:17-ல் இயேசு பேதுருவை சத்தியத்தின் மூலமாக பரிசுத்தப்படுத்தி, வசனமே சத்தியம் என்றும், அவர் தான் அந்த வார்த்தை என்றும் கூறினார்.

உங்களை இரட்சிக்கிறதில்லை. தண்ணீர் உங்களை இரட்சிக்காது. உங்களை இரட்சிப்பது உங்கள் விசுவாசமாயுள்ளது. ஆனால் ஞானஸ்நானம் என்பது ஒரு கட்டளை ஆகும், அது செய்யப்பட வேண்டும், ஏனெனில் ஞானஸ்நானம் எடுக்கவேண்டும் என்று கூறிய பிறகு மறுபடியுமாக அப்படி செய்யத் தேவையில்லை என்று தேவனால் கூறமுடியாது. அதே போன்று இராப்போஜனம் எடுங்கள் என்று கூறிய பிறகு மறுபடியுமாக அதை எடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்று அவரால் கட்டளையிட முடியாது. நீங்கள் அதைக் கைக்கொள்ளத்தான் வேண்டும். அது தேவனோடு இருக்கின்ற மாறாத ஒரு கட்டளை ஆகும்.

> *என்னத்தினாலெனில் அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்.*

61 இப்பொழுது, நீங்கள் அங்கே புரிந்துகொள்கிறீர்களா? கிறிஸ்துவுக்குள்ளாக இல்லாமல், இராபோஜனம் எடுக்க முயற்சித்து திரும்பி வருகிற கிறிஸ்தவன், ஆவியில் ஐக்கியங்கொள்ளாதிருக்கிறவன்; அவன் அதை எடுக்க அபாத்திரனாய் இருக்கிறான். அவன் சென்று புகைபிடித்து, பொய் சொல்லி, திருடி, விபச்சாரம் அல்லது அதைப் போன்றதைச் செய்து, அல்லது ஒரு கிறிஸ்தவ ஜீவியத்தை செய்யாமல் இந்த இராப்போஜனத்தை எடுப்பானானால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான். அவன் ஜீவிக்கின்ற அந்தவிதமான ஜீவியத்தை மக்கள் காண்கிறார்கள், பிறகு அவன் உள்ளே வந்து, கிறிஸ்துவின் சரீரம் மற்றும்—மற்றும் மரணத்திற்குரிய இந்த கட்டளையை, ஒழுங்கை எடுத்து, வார்த்தையாகிய கிறிஸ்துவை தன்னுடைய இருதயத்தில் ஏற்றுக்கொண்டான் என்னும்—என்னும் அடையாளத்தை அவனுக்குள் எடுக்கையில், அங்கே இருக்கின்ற அந்த அடையாளத்தை எடுக்கையில், அவன் கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான்.

62 இப்பொழுது, இன்னும் சில நிமிடங்களில் அந்த அதே கேள்வியை நான் எடுக்கபோகிறேன், நாம் அதை எடுப்போமானால், ஏனென்றால் அது பரிசுத்த ஆவியின் தூஷணத்தின் அதே வரிசையில் வருகிறது. புரிகிறதா? ஏனெனில் ஏதோ ஒன்றை வெளிப்படையாக பிரசங்கித்த பிறகு, நீ செய்யக் கூடாததை செய்வாயானால் நீ ஒரு மாய்மாலக்காரனாகக் காணப்படுகின்றாய். சரி! இதை நான் முடிக்கட்டும், பாருங்கள், பிறகு நாம் நிறுத்துவோம்.

> *இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்.*

வேண்டும். ஒரு மனநிலை சரியாயில்லாத ஒரு பெண்தான் அந்த விதமாக தன் நிர்வாணத்தை வெளிக்காட்டுவாள்" என்று கூறினாள்.

81 நான், "தேனே, அவள் ஒரு அமெரிக்கன்; அவ்வளவேதான். இங்கே அது வாடிக்கையாய் நடக்கிற ஒன்றுதான். அவர்கள் அதை செய்வார்கள், ஏனென்றால் அது ஒரு வழக்கம்" என்றேன். பாருங்கள், அவர்கள் தங்கள் கல்வியறிவின்படி செயல்படுகின்றனர். ஆனால் உங்களுடைய அறிவாற்றல்கள், நீங்கள் உங்களுடைய சிந்தையின்படி செயல்படுவீர்களானால், நீங்கள் பிசாசினால் கட்டுப்படுத்தப்படுகிறீர்கள். பிசாசானவன் ஒரு மனிதனின் மூளையை எடுத்துக்கொண்டான், ஆனால் தேவனோ மனிதனின் இருதயத்தை எடுத்துக்கொள்கிறார். நீங்கள் ஏதோ ஒன்றைக் காணும்படியாக பிசாசானவன் செய்கிறான். நீங்கள், "பாருங்கள், அது சரிதான், அது சரிதான், யோசியுங்கள், அதை சிந்தித்துப் பாருங்கள்" என்று கூறுகிறீர்கள். ஆனால் வேதாகமம் நம்முடைய யோசனைகளை புறம்பாக்கி நம்மால் காணமுடியாதவைகளை விசுவாசத்தினாலே நாம் விசுவாசிக்கிறோம். தேவன் மனித இருதயத்தின் மீது வருகையில் அதைத்தான் அவர் செய்கின்றார்.

82 ஏதேன் தோட்டத்திலே பிசாசானவன் மனிதனுடைய மூளையை உபயோகித்தான்: தேவனோ அவனுடைய இருதயத்தை தெரிந்துகொண்டார். அந்த மனித இருதயத்தில் தான், தேவன் வாசம்பண்ணுகிற, தேவனுடைய சிங்காசனம் இருக்கின்றது. ஆகவே இப்பொழுது, அது அறிவுப்பூர்வமாக...நிச்சயமாக, தேவனால் பிறந்த எந்த ஒரு மனிதனோ அல்லது பெண்ணோ தாங்கள் எந்த இராஜ்யத்திலிருந்து வந்துள்ளனரோ அந்த விதமாகவே நடந்துகொள்வார்கள். அல்லேலூயா! அது என்னை சத்தமிடச் செய்கிறது. ஏன்? ஏனெனில் நீங்கள் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் வந்திருப்பதனால், நீங்கள் பாவத்தை வெறுத்து, நீங்கள் தேவனை நேசிக்கிறீர்கள்; ஆதலால் நீங்கள் மரித்தாலும் அல்லது மரிக்காமலிருந்தாலும் அதை பொருட்படுத்தாமல் நிற்பீர்கள். அது தவறாயிருப்பதால், தவறை தவறு என்று கூறி அதை எதிர்த்து நிற்பீர்கள்; தேவனுக்கு முன்பாக நீங்கள் உத்தமராய் நடப்பீர்கள். அது உங்களுடைய ஆவி, உங்களுக்குள் இருக்கின்ற அந்த ஜீவனானது வேறொரு இடத்திலிருந்து வந்திருக்கிறது என்று காண்பிக்கின்றது, அங்கே அது பரிசுத்தமாகவும், சுத்தமாகவும், கற்புடையதாகவும், கறைபடாததாகவும் இருக்கிறது.

83 நீங்கள், "தெய்வீக சுகமளித்தலா?" என்று கேட்கலாம். நிச்சயமாக! தெய்வீக சுகமளிப்பவர் எங்கே இருக்கின்றாரோ அங்கிருந்துதான் என்னுடைய ஆவியும் வந்திருக்கிறது. தெய்வீக சுகமளித்தலின் தேசத்திலிருந்துதான் நாம் வந்துள்ளோம். ஆமென்!

84 "தேவன் இருக்கிறார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்" என்று கூறலாம். நிச்சியமாகவே, இது தேவன் இருந்த இடத்திலிருந்துதான். நாம் ஆபிரகாம் ஈசாக்கைப் போல

125 இப்பொழுது நாம் இங்கே வரி வசூலிப்பல் இருப்பதுபோல, ஒரு சர்ச்சை, நாம் ஒரு சபையல்ல என்று கூற முயற்ச்சிக்கின்றன, ஆனால் நாம் ஒரு சபைதான் என்று கூறத்தக்கதாக நாம் அரசியல் சாசன உரிமைகளை பெற்றுள்ளோம். அரசியலமைப்பு சட்டம் இருக்கும் வரை, அதில் எந்த திருத்தமும் இல்லை, எவருக்கும் இருப்பதைப் போலவே நமக்கு முற்றிலுமான உரிமைகள் உள்ளன. நம்முடைய முற்பிதாக்கள் அதற்காகத்தான் உறுதியாக நின்றார்கள். ஆனால் நாம் என்ன செய்துள்ளோம், உடைக்கக்கூடிய ஒவ்வொரு அரசியல் சட்டங்களையும் நாம் உடைத்துள்ளோம், எல்லா சபைகளும் ஸ்தாபனங்களையும் உள்ளடக்கிய சபைகளின் சங்கத்தை சீக்கிரமாக உள்ளே வரவேற்றுள்ளோம், ஆகவே பிசாசு இதற்குள்ளாக உள்ளே வந்து உலகப்பிரகாரமான காரியங்களும் மற்றும் எல்லாவற்றையும் உள்ளூர் சபை அங்கத்தினர்கள், இன்னும் மகத்தான சபைகள், மற்றும் உயர்தர வகுப்பார், மற்றும் சமுதாயத்தினர், இன்னும் பிறவற்றைக் கொண்டிருக்கிறான், ஆனால் அந்த பழைய சபையோ மற்ற எந்தப் பிறப்பைப் போன்று ஒரு குழப்பத்திலிருந்து மறுபடியும் பிறந்து, இன்னுமாக அதற்கான கிரயத்தை செலுத்திக் கொண்டு, இன்னுமாக தாழ்த்தி மரித்துக் கொண்டு, பெந்தெகொஸ்தே நாளிலே அவர்கள் எப்படியாக பிறந்தனரோ இன்னும் அதே விதமாகவே செயல்பட்டுக்கொண்டு, அங்கே இருக்கின்ற அதே சபையானது…அவைகள் சபைகளின் சங்கத்தின் கீழாக மூடப்பட்டு அடைக்கப்படும். அது ஒரு சங்கம் அல்லது அதைப்போன்று ஒன்றினால் புறக்கணிக்கப்படும். ஒன்று நீங்கள் உள்ளே வரவேண்டும் அல்லது வெளியே செல்ல வேண்டும்.

126 மிருகத்தின் முத்திரையானது இப்பொழுது இன்றைக்கு செயலில் உள்ளது, மற்றும்—பரிசுத்த ஆவி தான் தேவனுடைய முத்திரையாகும். அதைப் புறக்கணிப்பதென்பது மிருகத்தின் முத்திரையாகும். நீங்கள் கட்டாயமாக பெற்றுக்கொள்ள வேண்டிய, பரிசுத்த ஆவியைக் காண்கிற எவரும், அதை ஏற்றுக்கொள்ளாமற்போனால், தானாகவே நீங்கள் அந்த மிருகத்தின் முத்திரையை எடுத்துக்கொள்கிறீர்கள், ஏனெனில் இரண்டு சாரார் மாத்திரமே உள்ளனர்: தேவனுடைய முத்திரையை கொண்டிராத எல்லாரும் மிருகத்தின் முத்திரையை பெற்றிருந்தனர். ஆகவே தேவனுடைய முத்திரையைப் பெற பரிசுத்த ஆவியைப் பெறத்தான் வேண்டும். அதை புறக்கணிப்பது மிருகத்தின் முத்திரையை கொண்டிருப்பதாகும். இதோ இதுதான் முழு காரியமும். அது முற்றிலுமாகச் சரியே.

127 இப்பொழுது, மணவாட்டி மேலே செல்கிறாள், மீதமுள்ளவர்கள் இங்கே விடப்படுகின்றனர். இவளே இரண்டாம் உயிர்த்தெழுதலில் வருகிறவள். “முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான், இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை.” அது சரி. இரண்டாம்

காரணமாகத்தான் இங்கே குட்டைக் கால்சட்டைகள் அணிந்து காணப்படுகின்ற பெண்கள் ஒரு கிறிஸ்தவனுக்கு மிக அசுத்தமாகக் காணப்படுகிறார்கள். அதன் காரணமாகத்தான் கொச்சைத் தன்மையான, மற்றும் அநேக அசுத்தமாக காரியங்கள் உள்ளன, அதனால்தான் புகைபிடித்தல், மது அருந்துதல், சூதாடுதல், தொலைகாட்சியில் வருகின்ற இந்த தணிக்கை செய்யப்படாத காட்சிகள், எல்லாம் அசுத்தமாயிருக்கின்ற காட்சிகள். ஏன்? ஏனெனில் நீங்கள் வித்தியாசமான ஒரு இராஜ்யத்தை சேர்ந்தவர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிறந்து உங்களுடைய மீட்பின் நாள் வரை பரிசுத்த ஆவியால் முத்திரையிடப்பட்டுள்ளீர்கள்.

139 தேவனாலே பிறந்தவன் பாவம் செய்யமாட்டான், ஏனெனில் அவனால் பாவமே செய்ய முடியாது. தேவனுடைய வித்து அவனுக்குள் இருப்பதால், அவனால் பாவமே செய்ய முடியாது. அங்கே உள்ளே பரிசுத்த ஆவி இருக்கும் வரை அது பாவத்தைக் குறித்த ஒவ்வொரு வாஞ்சையும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடுகிறது. ஆமென்! உங்களால் பாவமே செய்யமுடியாது; உங்களுக்குள் வாஞ்சையே இராது.

அதன் பேரில் நாம் அதிக நேரம் செலவிடலாம், ஆனால் துரிதமாகப் பார்ப்போம். நாம் அவையெல்லாவற்றினூடாகவும் பார்க்க முடியாமற் போய்விடுமோ என்று, நான் நினைக்கிறேன்.

### 81. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்து பெண் பிரசங்கிகளை பிரசங்கம் செய்ய அனுமதிக்கின்ற சபைகளுக்கு, அவ்வளவு வல்லமையும் அதிகாரமும் எப்படி அவைகளுக்கு இருக்கிறது?

140 இப்பொழுது, இது கவனமாக கையாள வேண்டிய ஒரு காரியமாய் உள்ளது. இப்பொழுது, இதனோடு கருத்து வேறுபாடு கொள்ளப்போகின்ற மக்களிடம் பேசிக்கொண்டிருக்கிறேன், ஆனால் ஒரு கிறிஸ்தவன் என்கின்ற வகையில் நான் அதைக் கூறித்தானாக வேண்டும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் குறித்த வேதவசனப் பூர்வமான மேற்கோள் வேதாகமத்தில் இல்லவேயில்லை. பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் எந்த ஒரு நபருக்காகிலும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதாக வேதாகமத்தில் எந்த இடத்திலும் இல்லை. அது ஆறாம் நூற்றாண்டில் போதிக்கப்பட்ட ஒரு கத்தோலிக்க பாரம்பரியமாகும்.

141 தெளிக்கப்படுதல் என்பதும் வேதாகமத்தில் ஒருபோதும் இருந்ததில்லை, ஏனென்றால் மக்களின் மீது தெளிக்கப்படுதல் அல்லது ஊற்றப்படுதல் என்பது கிடையாது, ஆனால் தண்ணீரில் மூழ்குதல் என்பது உள்ளது. நீங்கள் அதை அறிந்துகொள்ள விரும்பினால், இதைக் குறித்து என்னிடம் கிரேக்க மற்றும் எபிரேய குறிப்புகள் என்னிடம் உள்ளன.

146 வேதாகமத்தில் எந்த ஒரு வேதவசனமும் காணப்படவில்லை… மற்றும் அபோஸ்தலனாகிய பவுல் மேடான வழியாய் கடந்து போய் சில பாப்டிஸ்ட் சகோதரர்களைக் கண்டான், அப்போஸ்தலர் 19. அவர்கள் ஒரு மகத்தான நேரத்தை அனுபவித்துக் கொண்டிருந்தனர்; அவர்கள் சத்தமிட்டுக் கொண்டிருந்தனர்; அவர்கள் மகத்தான சந்தோஷத்தையும் மற்றும் மகத்தான காரியங்களையும் உடையவர்களாயிருந்தனர்; அவர்கள் பிரசங்கித்துக்கொண்டும், கூடாரத்தில் சந்தோஷமும் கொண்டிருந்தனர்.

147 18ஆம் அதிகாரத்தில் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் இம்மக்களை சந்தித்திருந்தனர், அப்போலோ; அவர்கள் பாப்டிஸ்டுகளாயிருந்தனர். ஆகவே பவுல் அவர்களிடம் சென்று, “நீங்கள் விசுவாசிகளானது முதற்கொண்டு பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?” என்று கேட்டான்.

அதற்கு அவர்கள், “பரிசுத்த ஆவி என்பது உண்டு என்று எங்களுக்கு தெரியாதே” என்றனர்.

148 அவன், “எவ்வாறு உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது?” என்று கேட்டான். ஜேமஸ் அரசன் மொழிப்பெயர்ப்பில் அது “அப்படியானால் எந்த” என்று கூறுவதை நானறிவேன்; மூல வேதாகமத்தில், அது, “அப்படியானால் எவ்வாறு” என்று கூறப்பட்டுள்ளது. “எந்த அல்லது எவ்வாறு நீங்கள் ஞானஸ்நானம் பெற்றீர்கள்?”

149 அவர்கள், “இயேசுவிற்கு ஞானஸ்நானம் கொடுத்த அதே மனிதனால், யோவானால் நாங்கள் ஞானஸ்தானம் பண்ணப்பட்டுள்ளோம்” என்றார்கள். பவுல், “இனிமேல் அது கிரியை செய்யாது. நீங்கள் மறுபடியுமாக ஞானஸ்நானம் பெற வேண்டும்” என்றான். அவர்கள் இதைக் கேட்ட மாத்திரத்திலே, மறுபடியுமாக அவர்கள் தண்ணீருக்குள் வந்து இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே மறு ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். பவுல் அவர்கள் மீது கைகளை வைத்தான், பரிசுத்த ஆவி அவர்கள் மீது வந்தார். இப்பொழுது, அதாவது—பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று, இங்கே கூறி, இங்கேயும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்று, கூறுமானால், அது இரண்டுமே ஒரே இலக்கை அடிக்காது. அது சரியாக இருக்கவேண்டும்.

150 இப்பொழுது, மத்தேயு 28:19, இது தான் மத்தேயுவின் கடைசி அதிகாரம், மற்றும் மத்தேயுவின் கடைசி வசனம். நீங்கள் ஒரு காதல் கதையை வாசித்தால், அது, “ஜானும் மேரியும் பிறகு மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள்” என்றிருந்தால், ஜானும் மேரியும் யார்? நீங்கள் திருப்பி புத்தகத்தின் துவக்கத்திற்கு சென்று; அவர்கள் யாரென்பதை கண்டு பிடியுங்கள். பிறகு மகிழ்ச்சியாக வாழ்ந்த ஜானும் மேரியும் யாரென்பதை புரிந்துகொள்ளுங்கள். இயேசு, “புறப்பட்டுப் போய் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்கள்” என்று கூறியிருந்தால், *பிதா* என்பது ஒரு பெயரல்ல,

விடப்பட்டுள்ள அந்த சுபாவம் பரலோகத்துக்குரியதாய் உள்ளது. அதன்பின்னர் நீங்கள் ஒரு அந்நியரும் பரதேசியுமாயிருக்கிறீர்கள் என்று அறிக்கையிடுகிறீர்கள். அப்பொழுது நீங்கள் மேலிருந்து பிறந்திருக்கிறீர்கள். நீங்கள் மேலிருந்து வந்திருக்கிறீர்கள், நீங்கள் பரலோகத்தின் ஒரு பணியாளாய் இருக்கிறீர்கள், நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்கு ஒரு புது சிருஷ்டியாக இருக்கிறீர்கள், அதே சரீரத்தோடும், அதே ஆவியோடும், அது மாற்றப்பட்டு மாத்திரமே உள்ளது.

மேலும் நீங்கள், இல்லை, அந்த ஆவியின் உங்களுடைய சுபாவம் அநீதியிலிருந்து நீதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அது ஆத்துமா, சரீரம், மற்றும் ஆவியாயுள்ளது.

**88b. சகோதரன் பிரான்ஹாம், கிறிஸ்துவாய் இருந்தாலொழிய வேறெந்த மனிதனும் கிறிஸ்துவின் கிரியைகளைச் செய்ய முடியுமா?**

இல்லை. இப்போது, நீங்கள், அன்புள்ள நபரே, நீங்கள் பொருட்படுத்துகிறதோ, அதாவது...? நான் அதை மறுபடியும் வாசிக்கட்டும்.

**கிறிஸ்துவாய் இருந்தாலொழிய வேறெந்த மனிதனும் கிறிஸ்துவின் கிரியைகளைச் செய்ய முடியுமா?**

அதுதான் இது, "அவன் கிறிஸ்துவாய் இருந்தாலொழிய?" நிச்சயமாக. அப்படியே ஒரு நிமிடம், நாம் பரிசுத்த யோவானை எடுத்துக்கொள்வோம். பரிசுத்த யோவான் 14 வது அதிகாரம் மற்றும் நீங்கள் நோக்கி பார்க்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், இப்பொழுது, உங்களால் இதை துரிதமாக புரிந்துகொள்ள கூடுமானால், எனவே நீங்கள்...பரிசுத்த யோவான் 14:12, இதுதான் என்று நான் நினைக்கிறேன்.

நாம் அதை துரிதமாகப் பார்ப்போம், இதைக் குறித்து இயேசு என்ன கூறினார் என்பதை கவனியுங்கள். சரி, "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்லுகிறேன், அவர்..." அது யாராயிருந்தாலும், "என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்." எந்த மனிதனும், ஆயினும்...மனிதன்தானே கிறிஸ்துவாய் இருக்க முடியாது, ஆனால் கிறிஸ்துவின் கிரியைகள் ஒவ்வொரு விசுவாசியையும் பின்தொடரும். புரிகிறதா? அவர் கிறிஸ்துவின் திரியைகளை எந்த மனிதனுக்குள்ளும் செய்வார். "என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்." "நான் செய்வேன்," என்று அல்ல, "அவன் செய்வான், அவன்," "நான்," அல்ல. "ஆனால் என்னை விசுவாசிக்கிறவன் மற்றும் அவனுடைய விசுவாசத்தை என்னில் அறிக்கை செய்திருக்கிறவன் மற்றும் தனக்குத்தானே மரித்திருக்கிறவன் என்னுடைய ஆவி அவனுக்குள் வாசமாய் இருக்கிறது மற்றும் அவன் என்னுடைய ஒரு பாகமாகிறான்."

இப்பொழுது அது அவனை கிறிஸ்துவாக்குகிறதில்லை. அது அவனை மற்ற சபையோடு கிறிஸ்துவின் பாகமாக்குகிறது. சரி. அவன் கிறிஸ்துவல்ல, ஏனென்றால் அது அந்திக்கிறிஸ்துவாய் இருக்கும், நீங்கள் பாருங்கள். அவன் கிறிஸ்தவனிடத்தில் இருந்து பிரிந்து செல்கிறான். ஆனால் எந்த விசுவாசியும், கிறிஸ்துவின் கிரியைகளை செய்கின்றவனாக, அவன் இருக்க முடியும். சரி.

**88c. ஆசிர்வதிக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த வேதவாக்கியங்களில் இருந்து வீணாக திரும்பத் திரும்ப கூறுவதற்கு கொடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதை நாம் அறிவோம், ஏன் சில இடங்களில் பரிசுத்த ஆவி என்ற வார்த்தை [*ஹோலி ஸ்பிரிட்* என்று ஆங்கிலத்தில்—ஆசி.] உபயோகிக்கப்படுகின்றதையும் மற்ற இடங்களில் பரிசுத்த ஆவி என்ற வார்த்தை [*ஹோலி கோஸ்ட்* என்று ஆங்கிலத்தில்—ஆசி.] உபயோகிக்கப்படுகின்றதையும் எனக்கு தயவு செய்து சொல்லுங்கள். இதைக் குறித்து சரியான ஒரு காரணம் இருக்கிறது என்பதை நான் அறிவேன்...ஏன் என்று இதற்கான காரணத்தை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.**

அது ஒரே வார்த்தையாக இருக்கிறது. ஆவிக்கு [ஆங்கிலத்தில் ஸ்பிரிட் மற்றும் கோஸ்ட்] என்று உள்ளதும் ஒன்று தான். ஒரு கோஸ்ட் அல்லது ஒரு ஸ்பிரிட் என்று வேறுபாடு ஏதுமில்லை; அவைகள் ஒரே மாதிரியானவை, ஒரே மாதிரியே. சரி. இப்பொழுது நாம் முடிவாக உள்ள கேள்விகளை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம், இப்பொழுது.

**88d. உங்களோடு உள்ள அந்த அக்கினி ஸ்தம்பம் என்றால் என்ன?**

அது ஒரு நன்மையான ஒன்றாய் இருக்கிறது! கிறிஸ்து! பரிசுத்த ஆவி! அது என்னோடு மாத்திரமல்ல, அது உங்களோடும் இருக்கிறது. அது அங்கே பிரசன்னமானது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டனர் என்று வேதம் போதிக்கிறபோது, என்ன சம்பவித்தது? ஒரு அக்கினி ஸ்தம்பம் அவர்களைப் பின்தொடர்ந்தது. அற்புதங்களை செய்தது இஸ்ரவேல் புத்திரர் அல்ல, அது அவர்களைப் பின்தொடர்ந்த அக்கினி ஸ்தம்பமாக இருந்தது. அது சரிதானே? உடன்படிக்கையின் தூதனாய் இருந்த, அந்த லோகாஸை எத்தனை பேர் அறிந்திருக்கிறீர்கள்? ஏன், உண்மையாகவே, அது உடன்படிக்கையின் தூதனாய் இருந்தது என்பதை நாம் அறிவோம். சரி. அது கிறிஸ்துவாய் இருந்தது. எகிப்தின் ஐஸ்வரியங்களைக் காட்டிலும்...கிறிஸ்துவின் ஐஸ்வரியங்களே மகத்தான பொக்கிஷங்கள் என்று மோச எண்ணினான். அது சரிதானே? சரி.

அப்பொழுது கிறிஸ்துவாய், லோகாஸாய், விடிவெள்ளி நட்சத்திரமாய், அல்பாவாக, ஓமேகாவாக இருந்தது. அவர் பூமிக்கு வந்தார். அவர் அநேக சமயங்களில் காணப்பட்டார். மேலும்—

மேலும் நாம் அதை என்னவென்று அழைப்போம் என்றால், ஒரு ஆவிக்குரிய சரீரம் என்றே என்று, நான் யூகிக்கிறேன். அவர்கள் மனித ரூபத்தை இதில் அங்கே முன்னர் ஆரம்ப ஏற்பாட்டில் கண்டனர். ஆனால் அவர் மாம்சமாகி நமது மத்தியிலே வாசம் செய்தார், தேவன் அவருக்குள் பரிபூரணமாக வாசம் செய்தார். சரி. அப்பொழுது அவர், “இன்னும் கொஞ்சம் காலத்திலே உலகம் என்னைக் காணாது. அதே சமயத்தில் நீங்கள் என்னை காண்பீர்கள் ஏனென்றால் நான் உங்களோடு இருப்பேன்...” என்றார். அது சரிதானே? “உலகத்தின் முடிவு பரியந்தம். நான் எங்கிருந்து வந்தேன்...” என்ன? “தேவன்; நான் தேவனிடத்திற்குப் போகிறேன்.” அது சரிதானே? அப்படியானால் அவர் (எதிலிருந்து?) அக்கினி ஸ்ம்பத்திலிருந்து வந்தார். அது சரிதானே? அப்படியானால் அவர் (எதற்கு?) அக்கினி ஸ்தம்பத்திற்குத் திரும்பினார்.

பவுல் தமஸ்குவிற்கு செல்லும் தன்னுடைய பாதையில் இருந்தபோது அந்த அக்கினி ஸ்தம்பம் அவனை சந்தித்து அவனை குருடாக்கியது. அது சரிதானே? அவர், “சவுலே, சவுலே, நீ ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்?” என்றார்.

அவன், “ஆண்டவரே...” என்றான். நீங்கள் கவனிப்பீர்களேயானால், ஆங்கிலத்தில் அந்த முதல் எழுத்து எல் என்பது பெரிய எழுத்தில் “ஏலோகிம்” என்று உள்ளது. “ஆண்டவரே நீர் யார்?”

அதற்கு அவர், “நான் இயேசு” என்றார். அக்கினி ஸ்தம்பம்.

அவருடைய காணக்கூடிய பிரசன்னமாகுதலுக்கு முன்னர் இங்கே அவர் இந்த கடைசி நாட்களில் இருக்கிறார், அவர்கள் அதைக் குறித்த ஒரு புகைப்படத்தை எடுக்கும் வரை அவருடைய ஆவியை அவ்வளவு ஆதிக்கமாகவும் அவ்வளவு தத்ரூபமாகவும் அனுப்புகிறார். இங்கே அது சபைக்குள்ளாக வந்து, பரிசுத்த ஆவியின் உதவியினால், அதை இப்பொழுதே செய்ய முடிகிறது, உங்களுடைய இருதயத்தில் வெளிப்படுத்த முடியாத ஒரு ரகசியமும் இருக்க முடியாது. அது தேவனுடைய வார்த்தை என்று, எபிரெயர் 4-ம் அதிகாரத்தில் வேதம் கூறியுள்ளது; இயேசு வார்த்தையாய் இருக்கிறார். “ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனோடு இருந்தது அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம்பண்ணினார்.” அது சரிதானே? “வார்த்தையானது இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாக இருக்கிறது. ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.”

அப்படித்தான் அது உள்ளது. அது நான் அல்ல. அது நீங்களும் அல்ல. அது அவராய் இருக்கிறது. அதுவே அதைப் பின்தொடர்கிற

175 கவனியுங்கள்! சர்ப்பமானது ஒரு வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய காலத்தில் இருந்த மனிதனைப் போன்று, தேவனுக்கு—இல்லை மனிதனுக்கு அடுத்த நிலையில் இருந்த ஒன்று. ஆகவே அதுதான் ஒரேயொரு காரியமாகும். சாத்தான் வேறொரு விலங்கை உபயோகிக்க நேர்ந்திருந்ததேயானால், அந்த வித்தானது ஸ்திரீயினுடைய வித்துடன் கலந்திருக்காது. எந்த ஒரு விலங்கின் வித்துடனும் ஒரு மனிதனின் வித்தை உங்களால் கலக்க முடியாது. அது கிரியை செய்யாது. ஆனால் வித்தைக் கலக்கும் இந்த விலங்கிற்கு முற்றுபுள்ளி வைத்தாயிற்று—அது அழிந்துவிட்டது. தேவன் அவனை ஒரு பாம்பாக மாற்றிவிட்டார். ஆனால் நினைவிருக்கட்டும்…

"ஏன் நீ ஒளிந்துகொண்டாய்? ஏன் நீ உன்னையே அத்தி இலைகளினால் மூடிக்கொண்டாய்?" என்றார்.

அப்பொழுது ஒரு சேனையிலுள்ளவர்கள் செய்வது போல அவர்கள் ஒருவரை நோக்கி ஒருவர் பழி சுமத்த ஆரம்பித்தனர். "பாருங்கள்." ஆதாம், "நீர் எனக்கு தந்த ஸ்திரீயானவள், அதின் கனியை எடுக்கும்படிக்கு என்னை வசீகரித்தாள்" என்றான்.

176 அதற்கு அந்த ஸ்திரீயானவள், "சர்ப்பமானது என்னை வஞ்சித்தது" என்றாள். இப்பொழுது, *வஞ்சித்தல்* என்றால் என்ன அர்த்தம்? "அவள்— அவன் என்னை வஞ்சித்தான்."

177 தேவன், "உன் வித்துக்கும் சர்ப்பத்தின் வித்துக்கும் நான் பகை உண்டாக்குவேன்" என்று கூறினார். வித்து! சர்ப்பத்திற்கு வித்தென்பது உண்மையாகவே இருந்தது, அது காயீனின் மூலமாக வந்தது. பெருவெள்ளம் ஏற்பட்ட காலம் வரை அறிவாற்றலுள்ளவர்கள், கல்வி அறிவுப்பெற்ற மக்கள் எல்லாருமே காயீனின் மூலமாகத்தான் வந்தனர். ஆபேல் பிறகு கொல்லப்பட்டான், இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை பிரதிநிதித்துவப்படுத்தத்தக்கதாக அவனுடைய இடத்தில் சேத் எழுப்பப்பட்டான். அவனிலிருந்து ஆடு மேய்ப்பவர்கள், தாழ்மையான மக்கள் தேவபயமுள்ள மக்கள் இன்னும் பிறமக்கள் வந்தனர். இந்த பிரபஞ்சத்தின் பிள்ளைகள் இராஜ்யத்தின் பிள்ளைகளைக் காட்டிலும் அறிவாளிகளாகவும், சாதுரியமானவர்களாயிருக்கிறார்கள் என்று இயேசு கூறினார். அது உண்மையே!

178 நம்மால் அவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. அவர்களைப் போல உங்களை ஆக்கிக்கொள்ள முயற்சிக்காதீர்கள். தேவனுக்கு முன்பாக உங்களை தாழ்த்துங்கள். அறிவாளியாகவும் சாதுரியவானாகவும் இருக்க விருப்பம் கொள்ளாதீர்கள். இயேசுவை மாத்திரமே அறிந்துகொள்ள வாஞ்சை கொள்ளுங்கள் மற்றும் அதை அப்படியே விட்டுவிடுங்கள், ஏனெனில் அங்கேதான் இன்றைக்கு சர்ப்பத்தின் வித்தானது இருக்கின்றது. விஞ்ஞானிகளும், புத்திசாலியான மனிதர்களும், கல்வி அறிவுப்பெற்றவர்களும்,

இங்கே இந்த காரியங்களைச் செய்தல், இவன் பெயல்செபூலினாலே இதைச் செய்கிறான், இவன் ஒரு பிசாசு" என்று கூறினர். ஆகவே இயேசு இந்த பாவம் ஒருபோதும் மன்னிக்கப்படாது, எனவே இது ஜெபிக்கப்பட முடியாத மன்னிக்கப்பட முடியாத ஒரு பாவமாகும். இது மன்னிக்கப்பட முடியாது. இதை செய்கின்ற ஒரு மனிதனோ அல்லது பெண்ணோ தங்களை, என்றென்றுமாக நித்தியமாக தேவனுடைய பிரசன்னத்திற்குள் வரமுடியாதபடிக்கு முத்திரையிட்டுக் கொண்டார்கள், இவர்களுக்கு மன்னிப்பேயில்லை என்று கூறினார்.

நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா?

> நான் அவரை நேசிக்கிறேன், நான் அவரைநேசிக்கிறேன்
> ஏனென்றால் முந்தி அவர் என்னை நேசித்ததால்,
> சம்பாதித்தார் என் இரட்சிப்பை
> கல்வாரி மரத்தினிலே.

193 கவனியுங்கள், நீங்கள் மிக அருமையாக இருந்தீர்கள், இந்த கேள்விகள் கடினமானவைகளாக இருக்கின்றன, இவை ஒரு நீண்ட நேரத்தை எடுத்துக்கொண்டன. இப்பொழுது நீங்கள் இந்த சபைக்குள் ஏழு முப்பது, எட்டு முப்பது, ஒன்பது முப்பது, இரண்டரை மணி நேரமாக, இந்த உஷ்ணமான சபையில் உட்கார்ந்து கொண்டிருந்தீர்கள். நீங்கள் அங்கே அப்படியே உட்கார்ந்திருப்பதற்காக வரவில்லை. இந்த நேரம் வரை சபையாரில் தொண்ணூற்றெட்டு சதவீதம் தங்கள் இருக்கையில் அப்படியே இருந்தனர். இதை நான் கூற விரும்புகிறேன்: ஜெபர்சன்வில்லே, நான் இதை உணர்கிறேன்; நீ இந்த கிருபையின் நாளிலே, பாவத்துக்குள்ளாகி விலகிச் சென்றாய். அதை, நான் நம்புகிறேன். முழு அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் இதுவேதான் என நான் நம்புகிறேன், ஆனால் உலகத்திலேயே எனக்கு மிகவும் உத்தமமான நண்பர்களில் சிலர் சரியாக இங்கே ஜெபர்சன்வில்லில் இருக்கின்றனர். எனக்காக மரிக்கவும் தயாராக உள்ள மக்கள் இங்கே எனக்குண்டு.

194 இப்பொழுது, இவ்வாறுள்ள ஒரு உஷ்ணமான இரவு பொழுதில், நம்முடைய வாசலில் உள்ள அந்நியர்கள், ஒருக்கால் நான் வேதவசனங்களின் பேரில் பேசி அதை விவரித்த விதத்தைக்கூட விசுவாசிக்காத ஒரு நபர் இங்கே எப்படி அமர்ந்துகொண்டிருப்பார் என்பதை எனக்கு கூறுங்கள், ஆனால் அவர்களோ பயபக்தியுடன் தேவபயத்துடனே உட்கார்ந்து அதைக் கவனித்தனர். நீங்கள் நீண்ட காலம் வாழ்வீர்களாக; நட்சத்திரங்கள் தூசிகளாய் மாறினாலும், நீங்கள் தாமே கிறிஸ்து இயேசுவில் வாழ்ந்துகொண்டேயிருப்பீர்களாக. உங்களுக்கு தேவையாயிருக்கின்ற எல்லாவற்றையும் தேவன் அளிப்பாராக. உங்களுடைய இருதயத்தின் வாஞ்சையெல்லாவற்றையும் அவர்

அருமையான சபைக்கூட்டம். நீங்கள் மிக அருமையாக இருந்தீர்கள்; இப்படியே நீங்கள் நிற்கும்படிக்கு விடுவதை நான் வெறுக்கிறேன்.

[ஒரு சகோதரன் சகோதரன் பிரான்ஹாமிடத்தில் பேசுகிறார்—ஆசி.] அங்கே பின்னால் இருக்கும் சிறு எடித்தின் பிறந்த நாள் இதுவாகும். எடித், என்னால் எண்ண முடிந்த உன்னுடைய...இதை உங்களுக்காக சகோதரன் நெவிலை நான் செய்யச் சொல்லப்போகிறேன். (இங்கே வா.) இந்த வாலிப பெண்ணிற்கு என்ன வயதாகிறதென்று நாம் கண்டறிவோம். [சகோதரன் நெவில், "முப்பத்தெட்டு" என்கிறார்.] முப்பத்தெட்டு வயது. தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக. டேவிட், எங்களுக்கு ஒன்றை கொடுங்கள்...நான் கூறுவதோ, டெடி, சரி, உன்னால் கூடுமானால், *உனக்கு மகிழ்சியான பிறந்த நாளாயிருப்பதாக* என்னும் பாடலுக்கு, ஒரு சுருதியைக் கொடுங்கள்.

> உனக்கு மகிழ்ச்சியான பிறந்தநாளாயிருப்பதாக;
> உனக்கு மகிழ்ச்சியான பிறந்தநாளாயிருப்பதாக;
> சகோதரி எடித், மகிழ்ச்சியான பிறந்தநாளாயிருப்பதாக;
> உனக்கு மகிழ்ச்சியான பிறந்தநாளாயிருப்பதாக.

இப்பொழுது, சபையாரெல்லாருமாக சேர்ந்து, *ஒருபோதும் வயோதிகராவதில்லை.* வாருங்கள், இப்பொழுது எல்லோருமாக சேர்ந்து பாடுவோம்.

> ஒருபோதும் வயோதிகராவதில்லை, ஒருபோதும் வயோதிகராவதில்லை.
> அந்த தேசத்திலே நாம் ஒருபோதும் வயோதிகராகமாட்டோம்;
> ஒருபோதும் வயோதிகராவதில்லை, அங்கு நாம் ஒருபோதும் வயோதிகராகமாட்டோம்,
> அந்த தேசத்திலே நாம் ஒருபோதும் வயோதிகராகமாட்டோம்.
>
> அந்த இனிமையிலே...
> நாம் அழகான அக்கரையிலே சந்திப்போம்;
> சீக்கிரத்தில் அந்த இனிமையிலே,
> நாம் அழகான அக்கரையிலே சந்திப்போம்.

நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? ஓ, அவர் அற்புதமானவராய் இருக்கிறார். மிகவும் நல்லவராக, மிகுந்த தயவுள்ளவராக இருக்கிறார்.

ஒரு சிறு குழந்தையின் பிரதிஷ்டை உண்டா?

